உ
சிவமயம்



சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி.பூபதி-[illegible]

அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்
## 31-05-2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி.பூபதி-சின்னத்துரை

அவர்களின் அமரத்துவம் குறித்த

# நினைவு மலர்

31—05—2009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது நினைவில்
என்றும் அழியாது வியாபித்திருக்கும்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
எம்பெருமான் திருவடி நிழலில் நித்திய
ஆத்ம சாந்திபெற வேண்டும் என
பிரார்த்தித்து எமது அன்பையும் இந்
நினைவு மலர்தனையும் அமரர் தம்
பாதங்களில் காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

-குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்று என் உள்ளமும் நானும் கிடந்து அலைந்து உய்தெழுதேன்
திருவொற்றி ஊரானே திருவாலவாயானே திருவாரூரானே
ஒரு பற்றில்லாமையும் கண்டிரங்காய் கட்சி ஏகம்பனே

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடையமல ராள்முனை நாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெண் மானிவ னன்றே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

மெய்தான் அரும்பசி விதிர் விதிர்த்துன்
விரை யார் கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய் தான் தவிர்த்துன்னைப் போற்றி
சய சய போற்றி யென்றுங்
கைதான் நெகிழ விடேன் உடையா
யென்னைக் கண்டு கொள்ளே...

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப் பாதமிரண்டும் வணங்குவதும் ஆகாதே
பன்களி கூர்தரு பாடலோடாடல் பயின்றிடுங் ஆகாதே
பாண்டி நன் னாடுடை யான்படை ஆட்சிகள் பாடுவதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர வென்கண் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவளர் விளக்கே உவப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தானுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
வம்பலத் தமரர் சேகரனே
நுனு கழலிணையென் னெஞ்சிறு ளினிதாய்த்
தொண்டனேன் நுகருமா நுகரே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் திருசேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழறவுழறி யுமை
மணவாள னுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போய கல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கு
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்
டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் பொழுது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலித் திருஞான சம்பந்தன்
பாதமலர் தலைக் கொண்டு திருத் தொண்டு பரவுவாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிரி வாசா
வித்தகா ஞான சந்நிதி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி பூபதி -சின்னத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு

சிவபூமி என்று சிறப்பிக்கப்படும் ஈழமணித் திருநாடு. இந்து சமுத்திர நித்திலம் என்ற புகழைப் பெற்ற இலங்காபுரியின் சிரமென விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் பெரும் பிரிவுகளில் ஒன்று வலிகாமம் கிழக்கு. சைவமும் தமிழும் ஓங்கி வளர்ந்த இடம் உரும்பிராய் என்னும் சிற்றூர்.

இவ்வூர் மக்கள் சைவத் தமிழ் பாரம்பரியத்தைப் பேணி வாழ்கின்றவர்கள். இவர்களில் வல்லிபுரம்-பொன்னுப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரியாக செல்வி பூபதி-வல்லிபுரம் அவர்கள் அவதரித்தார். இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, செல்வமுத்து ஆகியோரின் சகோதரியுமாவார்.

செல்வி பூபதி-வல்லிபுரம் தனது கல்வியைக் கற்று ஒழுக்க சீலராக வளர்ந்து வரும் காலத்திலே தனது திருமண வயதினை அடைந்தவுடன் அவருக்கு திருமணம் செய்ய பெற்றோர்கள் திர்மானித்தனர். அதன் பயனாக 1935ம் ஆண்டு நாகமுத்து-சின்னத்துரை அவர்களும் செல்வி பூபதி-வல்லிபுரம் அவர்களும் இல்வாழ்க்கையில் இனிதே இணைந்து கொண்டார்கள்.

*"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றி னின்ற துணை"*

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ற வண்ணம் இவ்வூரில் இலட்சியத் தம்பதியராக வாழ்ந்து வந்தனர். சின்னத்துரை-பூபதி தம்பதியர் உரும்பிராய் காளி அம்மனின் திருவருளால் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு சக்திதேவி, சீவரட்ணம், சந்திராதேவி, வசந்தாதேவி, பத்மநாதன், திருநாவுக்கரசு, காலஞ்சென்ற நவரட்ணராஜா, கிருஷ்ணகுமார் என்றே நாமங்களைச் சூட்டினார்கள்.

துணைவர் 1967ம் ஆண்டு இறைபதம் அடைந்தார். இதனால் பூபதி அம்மையார் செய்வதறியாது திகைத்தார். கணவனை இழந்து கைமை எய்திய பொழுதிலும் தமது பிள்ளைகளை **கண்ணை இமை காப்பது** போல காத்து பிள்ளைகளுக்கு எவ்வித குறையுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கல்வியும், நல்வாழ்வும் அமைத்துக் கொடுத்தார். மறுபுறம் தனது இஷ்ட தெய்வமான காளியம்மனுக்கு கூட்டுப் பிரார்த்தனையை (பஜனை) ஆரம்பித்து அதனையும் முன்னின்று நடத்தி அம்மனின் சேவகியாகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து வருகின்ற வேளையில் விரோதி வருடம் சித்திரைத் திங்கள் 28ம் நாள் (11-05-2009) அன்று அபரபக்கத்துத் துதியைத் திதியில் கேட்டை நட்சத்திரம் பொருந்தி வந்த புண்ணிய வேளையில் உரும்பிராய் ஊரில் சின்னத்துரை-பூபதி அவர்கள் எல்லாம் வல்ல இறைவியாகிய காளியம்மனின் திருவடிகளை அடைந்தார்.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்" (திருக்குறள்)*

## புரியவில்லை....
## என்னை மன்னித்துவிடுங்கள்!

*மார்கழித் திங்கள்*
*மனம்விட்டு கேட்டீர்கள்.....*
*போதுமடா, என் நில்*
*என்னுடன் என்று*
*புரியாத புதிராக நானும்*
*பயணிக்க, விமானம்*
*நடுவான் சென்று*
*மீண்டும் தரையிறங்கி....*
*தங்களைக் காண வைத்தது*
*ஆனால் அப்போதும்..........*
*புரியவில்லை ......... மீண்டும்*
*ஆவணித் திங்கள் உங்களுடன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இருப்பேன் என்றேன்
சரி போய் வா! என
வழியனுப்பி வைத்தீர்கள்
சித்திரைத் திங்கள் வந்ததும்
என் மகன் வருவான்
மறு திங்கள் என
மனைக் கதவுகளை திறந்து
வழிமேல் விழி வைத்து
காத்திருந்தீர்களே... அப்போதும் புரியவில்லை!
பலரும் பலன் பெறும் வகையில்
பாசமுடன் பாதை காட்டினீர்கள்
நேசமுடன் உங்களை அம்மா, அம்மம்மா,
வேவியாச்சி, பூபதி அக்கா எனப் பலரும்
கூவி அழைப்பார்களே..........!
இப்போ அந்த ஒலிகள் எல்லாம்
மௌனமாகியதைக் கண்டு நெஞ்சு
எரிமலைபோல் குமுறுகிறது அம்மா!
இச்செய்தி கூறவா
என் தாயே என்னை அழைத்தீர்கள்?
ஆனால்.... இப்போது புரிந்தது
உங்களுடைய அப்போதைய ஏக்கம்
நான், சிந்திக்கத் தவறியவனாக
ஏங்கி ஏங்கி மனதினுள் அழுகின்றேன்
என் தாயே ................
என்னை மன்னித்து விடுங்கள்!

**-மகன் கிருஷ்ணகுமார்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியாரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைந்தல்லோ சீர் விரதம் நீயிருந்தாய்
பரனை நினைந்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைந்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள் மாரி பொழிந்தானே
வகையாறுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்து விடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியாரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்க வென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியாரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியாரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியாரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால் உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

**கௌரி காப்பு முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபக லாச்சிசுவை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்து தாழாமே-அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நானிவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்-உருகியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவ தரிசியோ? தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல்-மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு?

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்ப
லாகுதே பாவியே னையகோ! - காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை!

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பாதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ? சந்ததமும்
உன்னையே நோக்கி யுகத்து வாங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்த அன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தாள். இன்றுவெந்து நீறானாள்-பாற்றெளிக்க
எல்லாரும் வாருங்கள்! ஏதென்றி ரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

- சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் – அது இதயத்தின் ஓசை.
- சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் – அது சக்தியின் பிறப்பிடம்.
- விளையாட நேரம் ஒதுக்குங்கள் – அது இளமையின் இரகசியம்.
- படிக்க நேரம் ஒதுக்குங்கள் – அது அறிவின் ஊற்று.
- நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் – அது மகிழ்ச்சிக்கு வழி.
- உழைக்க நேரம் ஒதுக்குங்கள் – அது வெற்றியின் வழி.

## இரண்டால் அறிவுபெற......

- வருவதும் போவதும் இரண்டு – இன்பம், துன்பம்
- வந்தால் போகாதது இரண்டு – புகழ், பழி
- போனால் வராதது இரண்டு – மானம், உயிர்
- தானாக வருவது இரண்டு – இளமை, மூப்பு
- நம்முடன் வருவது இரண்டு – பாவம், புண்ணியம்
- அடக்க முடியாதது இரண்டு – ஆசை, துக்கம்
- தவிர்க்க முடியாதது இரண்டு – பசி, தாகம்
- பிரிக்க முடியாதது இரண்டு – பந்தம், பாசம்
- அழிவைத் தருவது இரண்டு – பொறாமை, கோபம்
- எல்லோருக்கும் சமமானது இரண்டு – பிறப்பு, இறப்பு

## மூன்றால் முன்னேற......

- தவிர்க்க வேண்டியது மூன்று – புகைத்தல், குடித்தல், சூதாடல்.
- அடக்க வேண்டியது மூன்று – நாக்கு, கோபம், ஆசை
- ஒழிக்க வேண்டியது மூன்று – திருட்டு, பொய், சோம்பல்
- காக்க வேண்டியது மூன்று – வாக்குறுதி, நட்பு, அன்பு
- மதிக்க வேண்டியது மூன்று – முதியோர், மார்க்கம், சட்டம்
- போற்ற வேண்டியது மூன்று – தைரியம், மனமகிழ்ச்சி, திருப்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்!

நன்றியில்..................

எங்களின் அன்புத் தெய்வம்
அமரர் திருமதி பூபதி-சின்னத்துரை
அவர்கள் இறைவனடி சேர்ந்தபோது சொல்
லொணாத் துயரில் நாங்கள் செயலிழந்திருந்த
வேளை உற்ற இடத்து உதவி, எமக்கு
உறுதுணையாய் நின்ற உற்றார், உறவி
னர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும்
வெளிநாட்டில் இருந்து தொலை
பேசி வழியாக துயர் பகிர்ந்த
வர்களுக்கும், இறுதிக் கிரி
யைகளில் பங்கு கொண்டும்,
பல்வேறு வழிகளிலும் உதவிய
அனைவருக்கும் எமது
உளம்கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.



**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**உரும்பிராய் கிழக்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**சின்னத்துரை + பூபதி**

- சக்திதேவி + துரைராசா
  - மதனராஜ் (அமரர்)
  - ரவிராஜ்
  - நந்தராஜ்
  - சுகந்தினி
  - நிமாலினி
- சீவரட்ணம் + தியாகேஸ்வரி
  - கீமா
  - கிசோ
  - கீர்த்தனா
- சந்திராதேவி + செல்வரட்ணம்
  - யுவதிலா
  - ஜெயதிலா
- வசந்தாதேவி + ஞானேஸ்வரன்
  - மீரா
- பத்மநாதன் + நகுலேஸ்வரி
  - ஜடா
  - அகிலா
  - ஆரணி
- திருநாவுக்கரசு + பிறேமலதா
  - ரதீபன்
  - மீனா
  - கயூனா
  - வதனா
  - நிரூபன்
  - சுஜீபன்
- நவரட்ணராஜா (அமரர்)
- கிருஷ்ணகுமார் + மாதுமை
  - வைஷ்ணவி
  - அபிராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.




இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.
—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org